*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*02 07 2026 THURSDAY 12 40 PM*
*ஆகாஷ்வாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. இந்தியா - ஜப்பான் இடையேயான வருடாந்திர உச்சிமாநாடு புதுதில்லியில் இன்று தொடங்கியது.

2. பொதுவிநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசிக்கான தர நிர்ணயத்தை மேம்படுத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. கர்நாடகாவில் உள்ள கல்குவாரியில் நேரிட்ட விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

4. தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஐ.நா-வின் கூட்டத்தில் இந்தியா, தெரிவித்துள்ளது.

5. 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Dheeraj Kumar வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

இந்தியா - ஜப்பான் இடையேயான வருடாந்திர உச்சிமாநாடு இன்று புதுதில்லியில் தொடங்கியது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜப்பான் பிரதமர் திருமதி. Sanae Takaichi இதில் பங்கேற்று விரிவான பேச்சுகளை நடத்தினர்.

சர்வதேச விவகாரங்கள் உட்பட பல்வேறு அம்சங்கள் இந்த பேச்சுகளில் இடம்பெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த பேச்சுகளுக்குப் பின்னர் இருநாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகவுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

முன்னதாக, குடியரசுத் தலைவர் மாளிகையில் ஜப்பான் பிரதமருக்கு பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

>>>>><<<<<

*நாடுமுழுவதும் 80 கோடிக்கு மேற்பட்டோருக்கு இலவச உணவு தானியங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்களின் தரத்தை உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக உணவு அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மத்திய அமைச்சரவை வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவினை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இதன்படி, பொதுவிநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசிக்கான தரநிர்ணயம் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

*கடந்த 30 ஆண்டுகளில் முதன்முறையாக மத்திய அரசு இந்த முடிவினை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

>>>>><<<<<

*தில்லியின் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, போக்குவரத்து நெரிசலை குறைக்க உதவிடும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் □ா கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர். இதற்காக ஆறாயிரத்து 970 கோடி ரூபாய் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.*

>>>>><<<<<

*உத்தரபிரதேசத்தின் சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, அம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், 7 ஆயிரத்து 145 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.*

இந்த திட்டம் கான்பூர் - Kabrai இடையிலான பயண நேரத்தை குறைக்க உதவிடும் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி தொடர்பான புதிய திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

1952ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்த திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, இந்த புதிய திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக தொழிலாளர் நலத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதற்கான அறிவிக்கை, கடந்த மாதம் 29ஆம் தேதி வெளியிடப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிதியத்திலிருந்து பணம் பெறுவதற்கான நடைமுறைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதோடு, எளிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மேற்குவங்கத்தில் தேசிய கல்விக் கொள்கையை செயல்படுத்துவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் மேற்குவங்க உயர்கல்வி அமைச்சர் திரு. Jagannath Chattopadhyay மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. Dipak Barman ஆகியோருடன் நடத்திய பேச்சுகளின் போது அவர் இதனை தெரிவித்தார்.

மேற்குவங்கத்தில் மேற்கொள்ள வேண்டிய கல்வித்துறை சீர்திருத்தங்கள் குறித்தும் அவர் இந்த பேச்சுக்களின் போது எடுத்துரைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

தேசிய மின்னணு நிர்வாகம் தொடர்பான இரண்டு நாள் மாநாடு இன்று ஜெய்ப்பூரில் நிறைவடைகிறது.

*பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் நிறைவு விழாவில் பங்கேற்று சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான விருதுகளை வழங்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>><<<<<*

*கர்நாடகாவில் கல்குவாரியில் நேரிட்ட விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.*

*பெங்களூரு அருகே Madapattana-வில் இன்று அதிகாலை இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*உயிரிழந்த 8 பேரும் பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் காவல்துறையினர் கூறினர்.*

*>>>>><<<<<*

*அஸ்ஸாமில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.*

*13 மாவட்டங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*இந்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 72 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*Dhemaji மாவட்டத்தில் மட்டும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பாலங்கள், வீடுகள் மற்றும் சாலைகள் சேதமடைந்துள்ளதாகவும் அஸ்ஸாம் அரசு தெரிவித்துள்ளது.*

*இதற்கிடையே, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அஸ்ஸாமிற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.*

சேதங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ள குழு ஒன்று அம்மாநிலத்திற்கு அனுப்பப்படவுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம் ஆந்திராவில் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

திருப்பதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹானுடன் இணைந்து இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று இந்தியா கூறியுள்ளது.

ஐ.நா-வில் நடைபெற்ற தீவிரவாதத்திற்கு எதிரான மாநாட்டில் இந்தியாவின் சார்பில் இக்கருத்து தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாதத்தை ஒடுக்க சர்வதேச ஒருங்கிணைப்பு அவசியமாகிறது என்று ஐ.நாவிற்கான இந்தியாவின் பிரதிநிதி திரு. பி. ஹரீஷ், இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

தீவிரவாதிகளுக்கு நிதி ஆதாரங்கள் கிடைப்பதை தடுக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேபோல், தொழில்நுட்பங்களை தீவிரவாதிகள் தவறாக பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்றும் திரு. பி. ஹரீஷ் தெரிவித்தார்.

>>>>><<<<<

பாகிஸ்தானில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்தனர்.

*Khyber Pakhtunkhwa* மாகாணத்திற்கு உட்பட்ட *Saifullah* ஏரியில் சுற்றுலாப் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த இந்த படகு விபத்துக்குள்ளானதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

ஒருவரை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் அவர்கள் கூறினர்.

>>>>><<<<<

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் *11* பேர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்தனர்.

*Kyiv* நகரை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக யுக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

சில பகுதிகளில் ஏவுகணை தாக்குதல் நடைபெற்றதாக யுக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

>>>>><<<<<

*20* வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் *Dheeraj Kumar* வெண்கலப்பதக்கம் வென்றார்.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் *77* கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<

உலக பாரா வில்வித்தைப் போட்டியில், இந்தியாவின் *Bhawana - Pooja* இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

செக் குடியரசில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, *5-4* என்ற புள்ளிக்கணக்கில் ஜெர்மனியின் *Flora - Jule Lammers* இணையை வென்றது.

ஒற்றையர் பிரிவுகளில் *Harwinder Singh, Syam Sunder Swamy, Toman Kumar, Bhawana, Pooja* ஆகியோர் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

>>>>><<<<<

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Tanvi Patri, Dhyan Santhosh* ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் *Tanvi Patri, 21-9, 21-12* என்ற செட்கணக்கில் ஜப்பானின் *Anon Okimoto*-வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் *Dhyan Santhosh 21-19, 15-21, 21-15* என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் *Ho Isaiah Chu*-வை வென்றார்.

>>>>><<<<<

மும்பையில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், *15-13, 11-4, 11-3* என்ற செட்கணக்கில் எகிப்தின் *Abdullah Hafez*-ஐ வென்றார்.

>>>>><<<<<

குரோஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் *Praggnanandhaa, 4* புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

>>>>><<<<<

இந்தியா-ஏ - இலங்கை-ஏ அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி *Galle*-ல் இன்று தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்த து.

இதனையடுத்து பேட் செய்து வரும் இலங்கை-ஏ அணி சற்றுமுன்வரை விக்கெட் *2* விக்கெட் இழப்புக்கு *87* ரன் எடுத்துள்ளது.

>>>>><<<<<